

அமைச்சர் மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் எல்.சுந்தர்ராஜன் எம்.சி, பா.பி.தாஸ், செ.தமிழ்வேந்தன், லதா வாசு எம்.சி. தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க., எழும்பூர் தெற்கு பகுதி, திரு.வி.க. நகர் தெற்கு பகுதி, திரு.வி.க. நகர் வடக்கு பகுதி, வில்லிவாக்கம் கிழக்கு பகுதி சார்பில் ஜூன் 3 முத்தமிழறிஞரின் 102 வது பிறந்தநாள் "செம்மொழி நாள் விழாவை முன்னிட்டு 5000 நபர்களுக்கு உணவு விருந்தினை தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு வழங்கினார். இந்நான்கு இடங்களிலும் வழங்கப்பட்ட சமபந்தி உணவு வழங்கும் விழாவில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு, பகுதி கழகச் செயலாளர்கள் வி.சுதாகர், சொ.வேலு எம்.சி. எம்.சாமி கண்ணு, வே.வாசு, கூ.பீ. ஜெயின் எம்.சி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இச்சமபந்தி விருந்தில் மேயர் பிரியா ராஜன், பரிதயகம்கவி எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, என்.கிருஷ்ணமூர்த்தி, பி.எம்.யாழினி, ஓ.ஏ.நாகலிங்கம், கோ. ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராஜன் எம்.சி, கோ.மணி, அ.நிர்மலா தேவி, பரிதி இளம் சுருதி எம்.சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, வானவில் விஜய், டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீராசாவன், சுதா தீனதயாளன் மற்றும் கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர் பாபு - அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. - வே.வாசு - கூ.பி.ஜெயின் முன்னிலை!

# வில்லிவாக்கம் கிழக்கில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் - அறுசுவை உணவு!

## சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு வழங்கினார்! லதா வாசு எம்.சி. தலைமை!

சென்னை, ஜூன்.30,

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் - செம்மொழி நாளை முன்னிட்டு அறுசுவை உணவு வழங்கும் விழா நேற்று (29.6.2025-ஞாயிற்றுக் கிழமை) சென்னை-23, அயன்புரம், பட்டாச்சாரி தெருவில் மாமன்ற உறுப்பினர் லதா வாசு எம்.சி. தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர் பாபு, மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்.பி., அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., வே.வாசு, கூ.பி.ஜெயின் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு கலந்து கொண்டு அசைவ உணவு வழங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். லதா வாசு எம்.சி. தலைமை வகித்தார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் டி.வி.செம்மொழி, சாவித்திரி ஸ்ரீவீரராகவ, சுதாதீன தயாளன், வானவில் விஜய், எல்.பி.எப். ஆர்.வரதன், ஜி.ஜெ.பிரபு, லதாவாசு, எம்.சுரேஷ், புரசை டி.சம்பத், டி.தாமோதரன், டபிள்யூ. அமுல், நா.அறிவுடைநம்பி, விக்னேஷ், சீனிவாசன், ச.மனோகரன், எ.வேதா, கே.பாஸ்கர், சி. தேவராஜ், காஞ்சி செ. துரை, ம.ஜெகதீஸ்வரன், வி.சபாபதி, கி.ஜெய்சங்கர், மு.பரமானந்தம், ந.குமார், ப.செந்தில்குமார், எஸ். துரைபாபு, வ.ரமேஷ்பாபு, டி. ஸ்டாலினி, எ.சத்தியநாராயண், கே.ராஜா, வி.ஆர். ஜெயக்குமார்,

சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு தலைவர் ப.ரங்கநாதன், ஓ.ஏ.நாகலிங்கம், கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.கே. மூர்த்தி, கே.சந்துரு, சங்கர்நாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ். எம்.நாதன், எம்.விஜய குமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த், சி.மகேஷ் குமார், பரிதி இளம்சுருதி,

இந்திரஜித், கோ.ஏகப்பன், தேவஜகவர், ஜி.மகாதேவன், எ.புனிதவதி எத்திராசன், இசட் ஆசாத், ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ. நாகராசன், சொ.வேலு, சரிதாமகேஷ்குமார், பா.ஸ்ரீராமுலு, டாக்டர் ஜி.சாந்தகுமாரி, டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், ஜெ.எஸ்.பிரபு, வி.து. இராமமூர்த்தி,

பா. இளையா, ம.கலைச்செல்வி, ஐ.சி.எப்.மு.சுரேஷ்பாபு, சிட்கோ சேகர், ஆர். தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், பா.ஜானி, கோ.முருகேசன், ப.லோகு பாபு, கே.எஸ்.பாபு, ஆர். கோபாலகிருஷ்ணன், கோ.மணிவேந்தன், மா.கபிலன், பா.தே.தீனதயாளன், க.மணிமாறன், எஸ்.கே.பீக் குமார், ம.சுந்தர்எபி, ஆ.சக்திவேல், சிட்கோ பி.சுரேஷ்பாபு, பூ.சத்தியேந்திரன், டி.ஜானகிராமன், பிரேமாதயாளன், ஆர்.இருதயமேரி, வழக்கறிஞர்ஜி.அய்யனார், ஆர்.மோகன்ராஜ்,

டி.எச்.செல்வராஜ், ரா.கோபி, எம்.வெங்கடேசன், உ.பிரசன்ன வேலன், வழக்கறிஞர் பா. சுந்தர், எம்.சக்திவேல், ரா. காமேஷ்வரன், ஆர்.கற்பகம், டாக்டர் சி.என்.தருண்குமார், சி.எம்.பாரதி, டோ. பால்ஸ்டீபன், ம.முனுசாமி, சே. ராஜா, ஆர்.சீனிவாசன், ப. கார்த்திக், எம்.சிவராஜ், ஆ.ஏதயன், எல்.பி.எப். வ. பசுபதி, ரா.ராஜலிங்கம் என்கிற சின்னா, மு.துத்துப் பிள்ளை, எஸ்.தியாகு, ஆ. கணேசன், சீ.அன்பழகன், வி.சங்கர், சி.ரவிக்குமார், என்.ஜெயவேலு மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இறுதியில் 97 வது வட்டக் கழகச்செயலாளர் விக்னேஷ் சீனிவாசன் நன்றி கூறினார்.

நா.மோ.முரளி தலைமை! கோடம்பாக்கம் மு.சத்தியா முன்னிலை!

# 132 வது வட்ட பாக முகவர்கள் - பாக உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏமுமலை பங்கேற்பு!

சென்னை, ஜூன். 30-

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் மேற்கு பகுதி, 132 வது வட்ட பாக முகவர்கள் BLA2 மற்றும் பாக உறுப்பினர்கள் BLC கூட்டம் நேற்று (30.06.2025 - திங்கள்கிழமை) மாலை 6 மணி அளவில் கால் ராஜர் காலனி விளையாட்டு திடலில் வட்ட கழக செயலாளர் ந.மோ.முரளி தலைமையில் கோடம்பாக்கம் மு.சத்தியா முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன், தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, டி.நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏமுமலை, தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன், மாநில வர்த்தகர் அணி துணைத் தலைவர் எஸ்.மோகன், தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.

இதில் 132 வது வட்டக் கழ கக்கத்தை சார்ந்த நிர்வாகிகள் பாக முகவர்கள் (BLA2), பாக உறுப்பினர்கள் (BLC) ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

நேதாஜி யு.கணேசன் தலைமை ! எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை !

# 38வது வட்டத்தில் (பிஎல்ஏ2) (பிஎல்சி) (பிடிஏ) ஆலோசனைக் கூட்டம்!

## ஜே.ஜே.எபினேசர் - கே.வி.லோகேஷ் ஆலோசனை வழங்கினர்!

சென்னை, ஜூன் 30

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டத்தில் பி.எல்.ஏ2, பி.எல்.சி, பி.டி.ஏ. ஆலோசனைக் கூட்டம் வட்டக் கழக செயலாளரும் 4வது மண்டலக் குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, தலைமையில் நேதாஜி நகர் 5வது தெரு நாடார் திருமண மாளிகை (29.06.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில் நடைபெற்றது.

ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் எஸ். ஜெபதாஸ் பாண்டியன் முன்னிலையில் ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், தொகுதி பொறுப்பாளர் கே.வி.லோகேஷ், ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் மாஸ். டி.வெங்கடேசன், ஏ.டி. மணி, என்.லோகநாதன், மு.கோவிந்தராஜ், பி.சீனிவாசன், எஸ். கிருஷ்ணன், கே.சி. ராஜா, எ.முருகேசன், எஸ்.ராஜா, எம்.சரஸ்வதி, ஏ.மோகன், எம்.பி. பாலு, எல்.சந்திரசேகர், எஸ்.சக்திவேல், ஏ.ஆனந்தன், எம். ரஜாக்பாய், மீஞ்சூர் முகுந்தன், மற்றும் பி.எல்.ஏ2 எஸ்.கம்ருதீன், மணிகண்டன், பாத்திமா பீபி, மானா மதுரை, ஜலால், மைமுன் பீவி, எஸ். ஹரிகிருஷ்ணன், எஸ்.செந்தில்குமார், தமிழ்செல்வன், முகமதுவசியா, பி. தயாளன், பூபதி, ஷாலினி, துரைபாபு மற்றும் பி.எல்.சி, கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகள்,தர்கா சாலையில் பாப்பன் கால்வாயில் வெள்ள தடுப்பு முன்னேற்பாடு பணிகளை செங்கல்பட்டு மாவட்ட கலெக்டராக புதியதாக பதவியேற்றுள்ள மாவட்ட ஆட்சி தலைவர் திருமதி தி.சினேகா பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, மண்டல குழு தலைவர்கள் து.காமராஜ், சு.இந்திரன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# பக்தர்கள் கூடிய ஆன்மீக மாநாடா? பா.ஜ.க. கூட்டிய அரசியல் மாநாடா?

மதுரையில் இந்து முன்னணி சார்பில் பா.ஜ.க. பின்னணியில் நடந்த முருகப் பக்தர்கள் எனும் மாநாட்டில் திராவிட இயக்கத் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவை அவமதிக்கும் விதத்தில் வீடியோ காட்சி திரையிடப் பட்டிருக்கிறது. மக்களைப் பிளவுபடுத்தும் மதவெறி நோக்கத்தில் ஆணவம் படைத்த அமித்ஷா போன்றோரால், தமிழக மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த மாநாட்டில் அ.தி.மு.க.சார்பில் முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் ராஜு ராஜேந்திர பாலாஜி கடம்பூர் ராஜு ஆர்.பி. உதய குமார் மற்றும் எம்எல்ஏ ராஜன் செல்லப்பா போன்ற அ.தி.மு.க.வினர் கலந்து கொண்டுள்ளனர். பெரியார் அண்ணாவைப் பற்றிக் கொச்சைப்படுத்தும் விதத்தில் திரையில் ஒளிபரப்பான காட்சிகளை அமைதியாகக் கண்டு களித்தார்கள் ஒழிய, அதற்குக் கண்டனம் தெரிவித்து வெளியேறியதாக எந்த தகவலும் இல்லை. இது மிகப்பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

எந்தப் பெரியார் காலமெல்லாம் போராடி அடிமை நுகத்தடியிலிருந்து, நம்மை மீட்டுச் சமூக நீதிக்காகப் போராடினாரோ, அந்தப் பகுத்தறிவுப் பகலவன், இருபதாம் நூற்றாண்டின் சாக்ரடீஸ், இந்தியாவின் இணையற்ற ரூசோ, வால்டேர் என அனைவராலும் புகழப்பட்ட பெரியாரைச் சங்கிக் கூட்டங்களால் இழிவுப் படுத்தப் பட்டிருக்கிறது. தமிழும், தமிழனும் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என நம்மைத் தமிழ் உலகுக்கு இன அடையாளங் காட்டியவரும்; காஞ்சி தந்த கரிபாலிட்டி, அரசியல், பகுத்தறிவுப் பாடம் நடத்திய பெர்னாட்ஷா, இந்நாட்டின் இங்கர்சால், இப்சன் என இன எதிரிகளால் கூடப் புகழப்பட்டவர்தான் அண்ணா!.... தன்னைத் தமிழ்ச் சாதிக்காகவே ஒப்படைத்துச் சென்ற பெருமகனார் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவத்தைக் கொடியிலும், அவரது பெயரைக் கட்சியிலும் போட்டுக் கொண்டு, தமிழக வீதிகளில் பித்தலாட்ட நாடகம் நடத்திக் கொண்டிருக்கிற கொத்தடிமைகள்;

சி.பி.ஐ. சோதனைக்குப் பயந்து தங்கள் கட்சியைக் காவிக் கூட்டங்களின் காலடியில் மஞ்சள் கரைத்துக் குளித்துத் கொண்டிருக்கிற பழனிசாமிகளோ, மாநாட்டில் கலந்து கொண்டு, மாலை, மரியாதையோடு கொடுத்த வேலையும் கையில் வாங்கிப் பெருமைப்பட்டுக் கொண்டார்!.. "முருகன் மாநாடு அன்று வேல் கொடுத்திட்டிங்க.. மதுரைக்குப் போகாமலே முருகர் அருள் எனக்குக் கிடைத்து விட்டது" என்று பிள்ளையார் கோயில் உண்டக்கட்டி போல் வாங்கிப் பெருமைப்பட்டுக் கொண்டார்கள்!

"முருக பக்தர் மாநாட்டில் அரசியல் இருக்காது என்று நம்பிச் சென்றோம்; அண்ணா, பெரியார் குறித்து வீடியோ ஒளிபரப்பியது எங்களுக்குத்தெரியவே தெரியாது" என்று உதயகுமார் போன்றோர் உளறிக் கொட்டுகிறார்கள்; இமயமலையை இலைச் சோற்றில் வைத்து மறைக்க சப்பைக்கட்டு கட்டுகிறார்கள்!. கோயம்புத்தூர் பேரூர் ஆதீனத்தில் ஆர்.எஸ்.எஸ். நூற்றாண்டு விழாவில் பங்கேற்ற அதன் தலைவர் மோகன் பகவத்திற்கு வேலுமணிகள், அவரின் தம்பி அன்பரசன்கள் ஆகியோர் ஆரத் தழுவி வெள்ளியிலான முருகன் சிலையும், வேலும் வழங்கியுள்ளார்கள். அவர்கள் தங்களது வழக்குகளில், சட்டத்துக்குப் புறம்பாக முறைகேடாக சேர்த்த சொத்து, சவரணை, சகல சம்பத்து வரவுகளுக்கு எந்தவிதமான பங்கம் ஆபத்து வந்து விடக்கூடாது என்பதைக் காப்பாற்றிக் கொள்ளப் பாசப் பொழிவைக் காட்டிக் கொண்டார்கள்!

**கவிஞர் தமிழ்தாசன் - கழகத் தீர்மானக் குழுத் தலைவர்**



"கொள்கை வேறு; கூட்டணி வேறு. நாங்கள் விட்டுத் தர மாட்டோம்" என்று முட்டுக்கொடுத்து வீர வசனம் பேசி வருகிறார் எஸ்.பி. வேலுமணி. மற்றொரு புறத்திலே தந்தை "பெரியார், அண்ணா ஆகியோர் குறித்து விமர்சனங்களைத் தவிர்த்து இருக்கலாம்" என்று வாய் வலிக்காமல் இஞ்சி தின்ன குரங்காக சொல்லுகிறார்கள் இராஜேந்திர பாலாஜிகள்.. "முருகர் மாநாட்டில் அண்ணா, பெரியாரை விமர்சித்துக் காட்டிய காணொலி காட்சியை நான் பார்க்கவே இல்லை" என்று சத்தியம் செய்யாத குறையாகக் கூறுகிறார் நைனார் நாகேந்திரன்.

மூன்று நாட்களுக்கு முன்பு பேசிய அமித்ஷா ஆங்கிலத்தில் பேசுபவர்கள் வெட்கப்பட வேண்டும் என்று கூறி இருந்தார். ஆனால் அவருடைய ஆசானான ஆர்.எஸ் .எஸ் . தலைவர் மோகன் பகவத் கோவை ஆர்.எஸ்.எஸ். நூறாண்டு விழாவில் ஆங்கிலத்தில் பேசிப் பரபரப்பாக வகுப்பெடுத்துச் சென்றிருக்கிறார்..

ஏற்கெனவே, அண்ணாமலை போன்றோரால் பெரியார், அண்ணா, ஜெயலலிதா போன்றோரை இழிவுபடுத்திப் பேசப்பட்டது. அமித்ஷா பாராளுமன்றத்தில், டாக்டர் அம்பேத்கர் பற்றிப் பேசும்போது, "இது அம்பேத்கர் பேஷனாய் போய் விட்டது. அதற்குப் பதிலாக, கடவுளைப் பற்றி பேசி இருந்தால், ஏழு பிறவிகளுக்கும் சொர்க்கத்திற்குப் போய் இருக்கலாம்" என்று இழிவுப்படுத்திப் பேசினார். மொத்தத்தில் அ.தி.மு.க.வை எடப்பாடி கூட்டங்கள் தங்கள் சுய இலாபத்திற்காகக் காவி மயமாக்கும் பணியில் போட்டி போட்டு இறங்கி விட்டார்கள்.

"அறிஞர் அண்ணாவின் பேச்சு, செயல் எழுத்துக்கள் சிலரின் மனதைப் புண்படுத்தி இருக்கலாம்; அதனுடைய வெளிப்பாடாக வீடியோ வெளியிட்டு இருக்கலாம்; ஒரு நிகழ்ச்சி நடக்கின்ற நல்ல நிகழ்வுகளைப் பற்றிப் பேசுவோம். அதில் நடந்த ஒரு சில நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசி ஒட்டுமொத்த மாநாட்டு நல்ல கருத்துக்களைப் புறக்கணிக்க முடியாது என்று பா.ஜ.க.வின் குரலாக இராஜேந்திர பாலாஜி ஒலித்திருக்கிறார். பண மோசடி குற்ற வழக்கில் கர்நாடகத்திற்கு தப்பித்துச் சென்று காவல் துறையால் பிடித்து தூக்கிவரப்பட்ட ராஜேந்திர பாலாஜி தான் அப்படி பேசுகிறார். அவர் ஒரு காலத்தில், "மோடி எங்கள் டாடி!" என்று பா.ஜ.க.வின் கொள்கைப் பரப்புச் செயலாளராக நின்று பேசியவர் தானே இராஜேந்திர பாலாஜி.

இந்து முன்னணி பேரில் பா.ஜ.க. நடத்திய ஆன்மீகக் கூட்டம் என்ற பெயரால் அரசியல் மாநாட்டுக் கூட்டத்தை நடத்தியுள்ளது. மதவெறி பிடித்த தீர்மானக் கருத்துக்களுடன் இந்து மதக் கூட்டத்தை நடத்தியதுடன், தேர்தல் பிரச்சாரமாக்கி முடித்து இருக்கிறது.

இந்த மாநாட்டில், பூஜை, புனஸ்காரம் செய்யப்பட்டது. நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு அப்பட்டமாக மீறப்பட்டு இருக்கிறது. * கார்த்திகை தீப திருநாள் அன்று திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்ற வேண்டும். * ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்குக் காரணமான இந்திய இராணுவத்துக்கும், பிரதமர் மோடிக்கும் நன்றி * தமிழகத்தில் உள்ள குன்றங்கள் அனைத்தும் குமரனுக்கு என்ற வகையில் அனைத்து மலைகளையும் காக்க வேண்டும் * "தமிழகத்தில் உள்ள கோயில்களில் இருந்து அறநிலையத்துறை வெளியேற வேண்டும்" * வரும் தேர்தல் உள்ளிட்ட எந்தத் தேர்தல் வந்தாலும், நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்துக்களின் வாக்கு வங்கியை நிரூபிக்க வேண்டும் * ஒவ்வொரு மாத சஷ்டி தினத்தன்று நாம் அனைவரும் சஷ்டி கவசத்தைப்பாட வேண்டும்என்பனவாகிய ஆறுதீர்மானங்கள் முருகப் பக்தர்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

மாநாட்டில் முருகன் வழிபாட்டைப் பற்றிய கருத்துக்கள் எதுவும் முன்மொழியப்படவில்லை. முருகன் பற்றிப் பேசினால், அரசியலில் வெற்றி பெற்றுவிடலாம் என்றால்; ஆன்மீகச் சொற்பொழிவாளர் திருமுருக கிருபானந்த வாரியாரும், திரைப் படம் எடுத்த சாண்டோ சின்னப்பா தேவரும், பித்துக்குளி முருகதாசுந்தான் அரசியல் களத்தில் நின்று வெற்றி பெற்றிருப்பார்கள். மக்களின் சமய நம்பிக்கைகளை விமர்சிக்கும் அரசியல் பிரச்சாரத்தால், பா.ஜ.க. அவர்களைப் பிளவுபடுத்தும் உத்தியைக் கையாண்டு வருகிறது.

மாநாட்டில் அரசியல் பேசக்கூடாது என்று கூறப்பட்ட நிபந்தனைகள் மீறப்பட்டு இருக்கின்றன. இந்து சமய நம்பிக்கைகளை விமர்சிக்கும் அரசியல் கட்சிகளை புறக்கணிக்க வேண்டும்; தேர்தலில் ஒற்றுமையாக இருந்து இந்து வாக்கு வங்கியை உறுதிப்படுத்த வேண்டியது அவசியம் என்பதான தீர்மானங்கள் போடப்பட்டிருக்கின்றனவே. இது நீதிமன்றக் தீர்ப்பை அப்பட்டமாக மீறப்பட்டதல்லவா? இதற்கு வழக்கு வேண்டாமா?

சமத்துவம் சகோதரத்துவம் பேசப்படும் இந்திய நாட்டில், **(Equality before the Law)** அனைத்து சமூகத்தினரும் வாழும் தமிழ்நாட்டில் இந்துத்துவா கொள்கையை தூக்கிப் பிடிப்பது எந்த சட்டத்தின்படி நியாயமானது?

கடந்த காலத்தில் (28.11.2023) அன்று கோவை கருமத்தம்பட்டியில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த சிறுபான்மை கூட்டமைப்பு முப்பெரும் விழா என்ற பேரில் கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தில் பங்கேற்ற எடப்பாடி பழனிசாமிக்குப் பத்து அடி உயர மாலையை கிரேன் மூலம் அணிவித்து, தங்கவாள் ஒன்றைக் கொடுத்து பெற்றுக் கொண்டார். மேலும், அவருக்கு "சிறுபான்மை மக்களின் பாதுகாவலர்" என்று விருதும் வழங்கினார்கள்.

"இனி ஒருபோதும் பி.ஜே.பி.யுடன் கூட்டணி இல்லை" என்று சத்தியம் செய்து டமாரமடித்தார். இப்போது பா.ஜ.க. கூட்டிய முருகர் மாநாட்டில் போட்ட தீர்மானத்தின் படி, "இந்து சமய நம்பிக்கைகளை விமர்சிக்கும் அரசியல் கட்சிகளைப் புறக்கணிக்க வேண்டும்; தேர்தலில் ஒற்றுமையாக இருந்து இந்து வாக்கு வங்கியை உறுதிப்படுத்த வேண்டியது அவசியம்" என்ற பச்சையான முறையில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளது. இதற்கு எடப்பாடி பழனிச்சாமி கூட்டங்கள் என்ன பதில் சொல்லப் போகின்றன?

இந்தத் திராவிட இயக்க நாயகர்களைமதுரை மண்ணில் இந்து முன்னணி பேரில் பா.ஜ.க. என்ற மதப் பிரிவினைக் கோட்டான்கள் இழிவுப் படுத்தும் வகையில் எப்படிக் காணொலிக் காட்சி வெளியிடலாம்? அதைக் கண்டு, கேட்டு, ரசித்து அ.தி.மு.க.வினர் கைதட்டி வந்திருக்கிறார்கள் என்றால் இவர்கள் திராவிட இயக்கத் துரோகிகள், எதிரிகள் அல்லவா?

2014 ஆம் ஆண்டு பிரதமர் ஆன மோடி, சென்னைக்கு வந்து முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து நீண்ட நேரம் பேசினார்.அது குறித்த செய்தி எதுவும் வெளியிடவில்லை. அவருடைய தனிமையான சந்திப்பை இட்டுக் கட்டிக் கொச்சையாக இலங்கை இராணுவ வலைதளத்தில் செய்திகள்வெளியிடப்பட்டிருந்தனஇதைக் கண்டறிந்த கலைஞர், உடனே இலங்கை அதிபருக்கு கண்டனம் தெரிவித்து அச் செய்திகளை உடனடியாக நீக்க ஏற்பாடு செய்தார்.

இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையர் டி.என். சேஷன் Sheshan: **"An intimate Story"** என்ற தலைப்பில் 1994 அக்டோபர் மாதம் , "சேஷன் ஒரு உள்ளார்ந்த கதை" கே. கோவிந்தன் குட்டி என்பவர் சேஷன் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் பற்றி அவரிடம் பேட்டி கண்டு எழுதியிருந்தார். கோனார்க் வெளியிட்ட அந்தப் புத்தகத்தில் இந்தி எதிர்ப்பு போராட்டங்கள், அண்ணா குறித்தும் அவதூறான செய்திகள் இடம் பெற்றிருந்தன. இது கண்ட கலைஞர் உடனே எதிர்ப்பு தெரிவித்தார். சில கட்சித் தலைவர்களும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். "அண்ணாவின் எதிரிகள் கூட அவரைப் பற்றி இது பற்றி அவதூறுகள் கூறியதில்லை" என்று கலைஞர் எதிர்ப்பு தெரிவித்ததுடன் நூலில் உள்ள அவதூறுக் கருத்துக்களைத் திரும்பப் பெற வைத்த பெருமை கலைஞருக்கு உண்டு.

1992 இல் பாபர் மசூதியை இடிக்க மாட்டோம் என்று கூறி உச்ச நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துவிட்டு, கண்ணிமைக்கும் நேரத்தில், இடித்து தரைமட்டமாக்கி இராமர் கோயில் கட்டிய கூட்டம் அல்லவா இவர்கள்? மேற்கு வங்கத்தில் காளி துர்க்கை என்றும், மராட்டியத்தில்விநாயகர் சதுர்த்தி பேரில் கணபதி பூஜை என்றும், ஒரிசாவில் பூரி ஜெகநாதர் என்றும், குஜராத்தில் சோமநாதர் ஆலயம் என்றும், உத்தரகாண்டில் கேதார்நாத் கோயில் யாத்திரை என்றும் உத்தரப் பிரதேசத்தில் இராமர் கோயில் என்றும் வாரணாசியில் காசி விஸ்வநாதர் ஆலயம் என்றும், வடநாட்டில் வண்ணப் பொடி, நீரடித்து வருவோர் போவோர் மீது தூவி ஹோலி பண்டிகை என்றும் கூறி; இந்தியா முழுவதும் மதக் கலாச்சாரம் என்ற பெயரால் கலவரத்தைத் தூண்டி அரசியல் குளிர் காய்ந்து வருகிறது.

"மோடியா? இந்த லேடியா? என்று அ.தி.மு.க. கட்சித் தலைவி ஜெயலலிதாகேள்வி எழுப்பி, "2016 தேர்தலில் பா.ஜ.க.வோடு கூட்டு சேர்ந்தது நான் தவறு; இனி அது போன்ற தவறுகள் நான் செய்ய மாட்டேன்" என்று சத்தியம் செய்து, தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் வெளிப்படையாகப் பேசினார்.

தென்னகப் பகுதியில் மண்டைக்காடு கலவரத்தின் போது, எம்.ஜி.ஆர். அவர்கள் "ஆர்.எஸ்.எஸ் .தன் பயிற்சிகளை நிறுத்திக் கொள்ள வேண்டும்; பயிற்சி தருவதற்கு என்.சி.சி, சாரணர் போன்ற இயக்கங்கள் உண்டு. ஆர்.எஸ்.எஸினுடைய பயிற்சி நமக்குத் தேவையில்லை. ஆனால், இங்கு இந்து முன்னணி என்று பெயரால் பேரணி நடத்துகிறார்கள்; இந்தப் பேரணி நாட்டுக்குத் தேவையில்லை. இது நன்மையா? தீமையா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்து முன்னணிகாரர்கள் சொல்லும் மத அறிவுரைகள் வேண்டுமானால் மடாதிபதிகளுக்குச் சொல்லிக் கொள்ளட்டும். இது போன்று மக்களைப் பிளவுபடுத்தி பிரச்சனை செய்வதைத் தமிழ்நாடு அரசு ஒரு போதும் அனுமதிக்காது. குன்றக்குடி அடிகளார் போன்ற மடாதிபதிகள் போல் நடந்து கொள்ள பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்; இங்கு மத கலவரத்தை உருவாக்கிக் குழப்பத்தை யாரும் ஏற்படுத்த விட மாட்டோம்!" ....என்று எம்.ஜி.ஆர். கடுமையான கண்டனத்தை அப்போது தெரிவித்துப் பேசி இருக்கிறார். (1982 மார்ச்சு)

ஆகவே மதுரையில் நடத்தப்பட்டது முருகப் பக்தர்கள் கூடிய மாநாடு அல்ல. மதவெறி பிரச்சாரம் நடத்தும் பா.ஜ.க. கூட்டிய மாநாடு இது. தமிழ்நாடு என்பது பெரியார் அண்ணா கலைஞர் பதப்படுத்திய மண். இங்கு பா.ஜ.க.வின் பருப்புகள் வேகாது.

**கல் எறிபவர்களே.. தங்கள் கையைக் காயப்படுத்திக் கொள்ளாதீர்கள்!**